# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காஞ்சிபுரம் பிரிவு அலுவலகத்தை அணுகி தன்னுடைய பெயருக்கு பட்டா மாறுதலுக்கு மனு சமர்பித்ததாகவும், அம்மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்க திரு.சதீஷ், கிராம நிர்வாக அதிகாரி, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.8,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்டதாகவும், மேற்படி லஞ்ச பணத்தை திரு.செல்வராஜ், ஓய்வுபெற்ற தலையாரியிடம் கொடுக்குமாறு கூறியதாகவும், தான் லஞ்சம் கொடுக்க விரும்பவில்லை எனவும், நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 30.12.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது கிராம நிர்வாக அதிகாரி திரு.சதீஷ் லஞ்ச பணம் ரூ.8,000/-யை ஓய்வுபெற்ற தலையாரி திரு.செல்வராஜை வாங்கி கொள்ளுமாறு கூறியதின்பேரில் ஓய்வுபெற்ற தலையாரி திரு.செல்வராஜ், லஞ்ச பணமான ரூ.8,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது மேற்படி திரு.சதீஷ், கிராம நிர்வாக அதிகாரியும், ஓய்வுபெற்ற தலையாரியும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டனர்.

**PRESS NOTE**

The complainant approached the Vigilance & Anti – Corruption, Kanchipuram Detachment, and gave complaint that he had applied for Patta Transfer for which Tr.Sathish, Village Administrative Officer, Kanchipuram District demanded Rs.8,000/- as bribe for recommending the petitioner's application. In this connection a case was registered and a trap was organized today 30.12.2020.

During the course of trap proceedings, on the direction of Tr.Sathish, Village Administrative Officer, Kanchipuram District, Tr.Selvaraj, Retired Village Assistant received the bribe money of Rs.8,000/- from the complainant. Tr.Sathish and Tr.Selvaraj were caught red handed and arrested.